## மார்ச் - 03 - வெள்ளி

### தூய குணகுந்தா

### “உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?” (மத்.9:14)

---

### முதல் வாசகம்: ஏசாயா 58:1 – 9

இறைவனாகிய ஆண்டவர் கூறுவதாவது: பேரொலி எழுப்பிக் கூப்பிடு, நிறுத்திவிடாதே. எக்காளம் முழங்குவதுபோல் உன் குரலை உயர்த்து. என் மக்களுக்கு அவர்களின் வன்செயல் களையும், யாக்கோபின் குடும்பத்தாருக்கு அவர்களின் பாவத்தையும் எடுத்துக்கூறு. அவர்கள், நேர்மையானவற்றைச் செய்யும் மக்களினம் போலும், தங்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போர் போலும் நாள்தோறும் என்னைத் தேடுகின்றார்கள் என் நெறிமுறைகள் பற்றிய அறிவை நாடுகின்றார்கள் நேர்மையான நீதித்தீர்ப்புகளை என்னிடம் வேண்டுகின்றார்கள் கடவுளை அணுகிவர விழைகின்றார்கள். "நாங்கள் உண்ணா நோன்பிருந்த பொழுது, நீர் எங்களை நோக்காதது ஏன்? நாங்கள் எங்களைத் தாழ்த்திக் கொண்டபோது நீர் எங்களைக் கவனியாதது ஏன்? என்கிறார்கள். நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே நாடுகின்றீர்கள் உங்கள் வேலையாள்கள் அனைவரையும் ஒடுக்குகின்றீர்கள். இதோ, வழக்காடவும், வீண் சண்டையிடவும், கொடும் கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்! இன்றுபோல் நீங்கள் உண்ணா நோன்பிருந்தால் உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது. ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா நான் உண்ணா நோன்பின் நாளாகத் தெரிந்து கொள்வது? ஒருவன் நாணலைப் போல் தன் தலையைத் தாழ்த்திச் சாக்கு உடையையும் சாம்பலையையும் அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நீங்கள் நோன்பு என்றும் ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கின்றீர்கள்? கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு! பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும் விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும் உன் நேர்மை உனக்கு முன் செல்லும் ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின்சென்று காக்கும். அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய் அவர் உனக்குப் பதிலளிப்பார் நீ கூக்குரல் இடுவாய் அவர் "இதோ! நான்" என மறுமொழி தருவார்.

**பதில்பாடல்:** நொறுங்கிய உள்ளத்தை இறைவா நீர் அவமதிப்பதில்லை

### நற்செய்தி: மத்தேயு 9: 14 – 15

அந்நாட்களில் யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, "நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?" என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, "மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள் என்றார்.

**தியானம்:** நோன்பு என்பது இஸ்ரயேல் மக்களுடைய மிக முக்கியமான ஆன்மீக பழக்கவழக்கமாக இருந்துவந்தது. வருடத்திற்கு ஒருமுறை பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளில் அனைத்து இஸ்ராயேல் மக்களும் நோன்பு இருக்கவேண்டும் (லேவி 16:29) என்பது கடவுளிடம் இருந்து பெற்றுக் கொண்ட கட்டளை. இதனோடு கூட இஸ்ராயேல் மக்கள் போர், பஞ்சம், நோய், குழப்பமான சூழல், நாடுகடத்தப்பட்ட நேரம் மற்றும் இக்கட்டான துன்ப நேரங்களில் நோன்பு அறிவித்து, கடவுளின் குறுக்கீட்டை வேண்டி எல்லோரும் நோன்பு இருப்பது பழக்கமாக இருந்தது மேலும் ஒரு சில தனிநபர்களும் ஆன்மீகத் தலைவர்களும் மக்களின் பாவங்களுக்காக இறைவனிடத்தில் மன்னிப்பு வேண்டுவதன் அடையாளமாகவும், இறையருளைப் பெறுவதற்கான வழிமுறையாகவும் நோன்பினைக் கடைப்பிடித்து வந்தார்கள். இதுவே காலப்போக்கில் நோன்பு என்பது கடவுளை மையப்படுத்தாமல், தனிமனிதர்கள் மற்றும் அவர்களுடைய சமூக அந்தஸ்தை அடையாளப்படுத்தவும், பிறரிடமிருந்து தங்களை வேறுபடுத்திக்காட்டும் அடையாளமாகவும் பயன்பயுடுத்த ஆரம்பித்தார்கள். எனவேதான் இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் எசாயா இறைவாக்கினர் வழியாக உணர்த்துகின்றார்: ‘நோன்பு என்பது தனிநபர்களுடைய சுயலாபங்களுக்காக அல்ல மாறாக பொதுநன்மைக்காகவும், இறைவனின் இரக்கத்தைப் பெறுவதற்கான சாதனமாகவும் பயன்படுத்தப்படவேண்டும்’ என்று வலியுறுத்துகின்றார். இதைத்தான் பவுலடியார் “வாழ்வுக்கு வழியாக வேண்டிய சட்டம் எனக்கு சாவுக்கு வழியாயிற்று” (உரோ 7:10). கடவுளோடு நாம் கொண்டிருக்கும் உறவினைப் புதுப்பிப்பதற்கும், இறைவனுடைய இரக்கத்தை கண்டடையும், மனமாற்றத்திற்கும், இயேசுவோடு நமது நேரத்தை அதிக நேரம் செலவழிப்பதற்கும் உதவும் நோன்பு என்ற அடையாளத்தை, நம்முடைய சுய லாபங்களுக்காக மற்றவர்களைக் குற்றப்படுத்திக் காயப்படுத்தி நம்மையே உயர்வாகக் காண்பிப்பதற்காக பயன்படுத்தினால் அதனால் எத்தகைய லாபமும் கிடையாது. நம்முடைய மனங்களைத் தூய்மைப்படுத்தி, சிந்தனைகளை சீர்படுத்தி, வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தாததாக விடின் நோன்பு பயனற்றதாகிப் போய்விடும். ஆகவே இந்த தவக்காலங்களில் நாம் மேற்கொள்ளும் நோன்புகள் நமது வாழ்வை மாற்றட்டும் இறைவனோடு நாம் கொண்டுள்ள உறவை வளர்க்கட்டும்.